தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவித்து இருக்கிறது. தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டு இருப்பது நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியதைப் போல அரசு அங்கே தொழில் தொடங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல. தனியார் தொழில் அதிபர்கள், தொழில் முனைவோர்கள் ஏராளமாக அந்தப் பகுதியில் தொழில் தொடங்குவதற்குத் தேவையான சலுகைகள், மானியங்கள், முன்னுரிமைகள் வழங்குவதற்காகத்தான் சில பகுதிகள் தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஆட்சியில் ஏறத்தாழ 35 தாலுகாக்கள் மட்டுமே தமிழ்நாடு முழுவதும் தொழில் துறையில் பின் தங்கிய தாலுக்காக்கள் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இந்த ஆட்சியில் ஏறத்தாழ 105 தாலுக்காக்கள் தொழில் துறையில் பின் தங்கிய தாலுக்காக்கள் என்று அறிவிக்கப்பட்டு இருப்பதன் காரணமாக தனியார் தொழில் அதிபர்கள், தொழில் முனைவோர்கள் ஆர்வமாக முன் வந்து இதைப்போன்ற பகுதிகளில் தொழில் தொடங்குவதற்கு அரசை அணுகியிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய பகுதியில் தனியார் தொழில் அதிபர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் மூலமாக தொழில் கூடங்களை அமைப்பதற்கு அரசை அணுகவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

லம்பாடி மக்களைப் பழங்குடி மக்களாக அறிவித்தல்.

* 3545. *திரு. ந. நஞ்சப்பன் :*

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

லம்பாடி (சுகாளி) மக்களை பழங்குடி மக்களாக அறிவிக்க அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

தமிழகத்தில் உள்ள லம்பாடி இனத்தவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்காக இவ்வரசு மைய அரசுக்கு, ஏற்கனவே பரிந்துரை செய்துள்ளது. அது மைய அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(10-10)

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எறக்குழா என்ற ஒரு இனம் இருக்கிறது. அது ஆந்திராவிலேயிருந்து இங்கே வந்ததாக

1989 நவம்பர் 1]

தமிழரசு பத்திரிகையிலேகூட ஒரு ஆய்வுக் கட்டுரை வந்திருக்கிறது. அந்த இனம் தமிழகத்திலுள்ள பட்டியலிலே பேக்வேர்ட் கிளாஸ் என்று இருக்கிறது. ஆனால் ஆந்திராவிலே அது எஸ்.டி. என்று இருக்கிறது. ஆகவே இது தொடர்பாக அரசு முயற்சி எடுத்து அவர்களை எஸ்.டி. பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எந்தவொரு இனத்தையும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கோ அல்லது விலக்கவோ மைய அரசுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சீரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லம்பாடி இனத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்திலே பலர் ஆக பல்வேறு இடங்களில் இருக்கிறார்கள். அந்த மக்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள். எந்த வருமானமும் இல்லாமல் மிகவும் பின்தங்கிய மக்கள். அன்றாட வாழ்க்கைக்குப் பிச்சை யெடுத்தும், மலையேறும்படியான தொழிலில் ஈடுபட்டும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களைப் பிற்படுத்தப்பட்ட இனத்துப் பட்டியலில் இணைக்காமல் இன்றுவரையில் புறக்கணித்து வருகிறார்கள். நமது அரசாவது அவர்களைப் பிற்படுத்தப்பட்ட பட்டியலில் இருந்து எடுத்து எஸ்.டி. பட்டியலில் இணைத்து அவர்களுக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கும்படியான சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலும் இப்படிப்பட்ட மக்கள் பெருவாரியாக இருக்கிறார்கள் என்பதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் வனச் சரகம், முத்தியாலத்தூர் திங்களூர் மலையில் மலையாளிகள் என்ற பழங்குடியினர் இருக்கிறார்கள். மலையாளிகள் என்றால் அவர்கள் கேரளாவைச்

சேர்ந்தவர்கள் இல்லை. அவர்கள் மலையை ஆண்டவர்களோ, என்னவோ ; எப்படியோ அவர்களுக்கு அந்தப் பெயர் வந்திருக்கிறது. அவர்களுடைய குழந்தைகளைப் படிக்க வைப்பதற்கு, மலைவாழ் மக்கள் அவர்களுடைய சலுகைகளைப் பெறுவதற்கு சர்டிபிகேட் கேட்டால் கொடுக்காமல் இருக்கிறார்கள். தாசில்தாரோ மற்றவர்களோ அவர்களுக்குரிய சர்டிபிகேட்டுகளைக் கொடுக்க மறுக்கிறார்கள். அவர்களை, பழங்குடியினர், மலைவாழ் மக்கள் என்று அரசு ஒத்துக்கொண்டு, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். மலையாளிகள் என்ற பெயர் இல்லை என்று வேறு சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் உடனடியாக முன்வந்து—அவர்கள் நீண்ட காலமாக மலையிலே வாழ்ந்துகொண்டு இருக்கக்கூடியவர்கள் ; நாகரீகம் அற்றவர்கள்—இதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுமாதிரியான பல்வேறு கோரிக்கைகள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதுபற்றி கூடிய விரைவில் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 3207 மற்றும் 3235 மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

துணை மின் நிலையம் அமைத்தல்.

*3775 திரு. எம். முகமது சித்திக்:

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தரங்கம்பாடி, சந்திரபாடி, பொறையார், மாணிக்க பங்கு போன்ற பகுதிகளின் நலனுக்காக துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு தலைவர் அவர்களே,

ஆம்.